ஈழமுரசு கனடா

EELAMURASU CANADA

நிர்வாகி
நிசாந்தன்
பிரதம ஆசிரியர்
ரஞ்சன்
ஆசிரியர் குழு
ஐ.சண்முகநாதன்
ஈசன், செல்வராஜா
சிவா பரஞ்சோதி
அலுவலக நிர்வாகம்
இ.கந்தசாமி
வரைகலை
அனு கிராபிக்ஸ்
அலுவலகம்
2625 EGLINTON AVE EAST #2
SCARBOROUGH ,ON.M1K 2S2
தொலைபேசி / Telephone
416-291-7474
Cell:416•857•3941
தொலைநகல்/ Fax
416•291•7472
மின் அஞ்சல்/ E mail
Eelamurasucanada@yahoo.com

மொன்றியல்
514-944-9315

அனைத்துலக அலுவலகங்கள்

பிரான்ஸ்
00 31 140 05 95 15
பிரித்தானியா
078 8679 0198
சுவிஸ்
079 828 6871
ஜேர்மனி
0208 205 99 103
இத்தாலி
091 6824056
டென்மார்க்
75366279
நோர்வே
22 425 527
நெதர்லாந்து
076 5425804
அவுஸ்திரேலியா
61 3 8802 8368

குறிப்பு
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு

"தமிழ் மக்களாகிய நாம் ஒரு தேசியக் கட்டமைப்பைக் கொண்டவர்கள். வரலாற்று ரீதியாக நாம் ஒரு தேசியமாகவே வாழ்ந்து வந்தோம். தேசியமாகவே வாழ்ந்து வருகின்றோம். தேசியமாகவே வாழப்போகின்றோம்."



தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன்

# பிரித்தானியாவின் நகர்வுகளால் சிறீலங்கா அதிர்ச்சி

# பிரதித் தூதுவரை அழைத்து கடும் கண்டனம்

(26.02.2009, வெள்ளிக்கிழமை)

பிரித்தானிய அரசின் தமிழ் மக்களுக்கு ஆதரவான சில நகர்வுகளால் சிறீலங்கா பெரும் அதிர்ச்சியடைந்துள்ளதுடன், தனது கடும் எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளது. பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை உலகத்தமிழர் பேரவையின் முதல் மாநாடு ஆரம்பமாகியது. நான்கு நாட்கள் நடைபெறும் இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வில், பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபாண்ட் உட்பட அந்நாட்டின் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு உரையாற்றியதுடன், பிரதமர் கோர்டன் பிறவுண் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டதும் சிறீலங்காவை கடும் அதிர்ச்சிக்கும் கோபத்திற்கும் உள்ளாக்கியுள்ளது.

சர்வதேச நாடுகள் தமிழ் மக்களுக்கு எந்தவிதத்திலும் ஆதரவினை வழங்காது, தமக்கு மட்டுமே ஆதரவு வழங்கவேண்டும் என்ற சிறீலங்கா ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன், மகிந்த அரசு இந்த நிகழ்வில் பிரித்தானிய அரச பிரமுகர்கள் கலந்து கொள்வதை தடுத்து நிறுத்தாமல் போனமை குறித்து ஆளும் கட்சி, எதிர்கட்சியினரிடையே கருத்து மோதல்களையும் உருவாக்கியுள்ளதாக தெரியவருகின்றது. இதன் எதிரொலி சிறீலங்கா நாடாளுமன்றத் தேர்தலிலும் மகிந்த அரசிற்கு பாதகமான நிலைமைகளை ஏற்படுத்தலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதன்கிழமை மாலை சிறீலங்காவிற்கான பிரித்தானிய பிரதித் தூதுவரை வெளிவிவகார அமைச்சிற்கு அழைத்த வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம, சிறீலங்காவின் கடும் எதிர்ப்பை அவரிடம் தெரிவித்துள்ளார். கொழும்பில் நடத்திய விசேட செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் போகொல்லாகம இதனைத் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகளின் முன்னணி அமைப்புகள் பல சேர்ந்தே 'குளோபல் தமிழ் போரம்' அமைப்பை உருவாக்கியுள்ளன. டேவிட் மில்லிபாண்ட் அதன் மாநாட்டில் கலந்து கொள்வது அந்த அமைப்பிற்கு நியாயத் தன்மையை வழங்கிவிடும் என்று அவர் கூறியுள்ளார். இது சிறீலங்காவின் இறைமைக்கு அச்சுறுத்தலான விடயம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 'உலகத் தமிழர் பேரவை' என்ற தமிழர்களின் அமைப்பு, பிரித்தானிய நாடாளுமன்றக் கட்டிடத்தில் கடந்த புதன்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த அமைப்பின் தலைவர் கலாநிதி எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில், பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபான்ட் உட்பட பல அமைச்சர்கள், ஆளும், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரித்தானிய நிழல் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக்கும் கலந்து கொண்டு உரையாற்றியதுடன், 14ற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 'உலகத் தமிழர் பேரவை' அமைப்பின் அங்கத்துவ அமைப்புக்களின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

ஆரம்ப நிகழ்வை பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் டேவிட் மிலிபாண்ட் தொடக்கி வைத்து உரையாற்றியிருந்தார். அவர் தனது உரையில், 'தமிழ் மக்கள் அனைவரும் ஒரு குடையின் கீழ் ஒன்றுபட்டு, ஓரணியில் செயற்பட வேண்டும் என்றும் இன்றைய சூழலில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள் தொடர்ந்தும் தங்களது கோரிக்கைகளை சர்வதேச சமூகத்திடம் எடுத்துரைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலையான சமாதனத்தை ஏற்படுத்தவும் இனங்களிடையில் நல்லுறவை ஏற்படுத்தவும் கூடிய சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் அதனை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும் என்றும் பிரித்தானிய வெளிவிகார அமைச்சர் சிறீலங்கா அரசிடம் வலியுறுத்துவதாக தெரிவித்துள்ளார். சிறீலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தற்போதைய நிலமையினை உரிய முறையில் பயன்படுத்தி அவதானிக்கத் தக்கதான மாற்றங்களை நாட்டில் ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்த அதேவேளை, உலகத்தமிழர் பேரவைக் குழுவினர் பிரித்தானியப் பிரதமர் கோர்டன் பிறவுணையும் நாடாளுமன்றக் கட்டடத்தில் சந்தித்தனர். இச்சந்திப்பில், உலகத் தமிழர் பேரவை முன்னெடுக்கவுள்ள முகாமிலுள்ள மக்களை விடுவித்தல், போர்க்குற்ற விசாரணைக்கான செயற்பாடுகள், மற்றும் மக்களின் மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்து அவரிடம் விளக்கமளிக்கப்பட்டதுடன், தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசை பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த கோர்டன் பிறவுண், சிறீலங்கா அரசுக்குக்கான தமது அழுத்தம் தொடர்ந்து வருவதாகவும், அண்மையில் அதிபர் தேர்தல் நடைபெற்றபோதும் கூட அரசின் ஜனநாயக விரோதப் போக்கைக் கண்டித்து கடிதம் எழுதியிருந்ததாகவும் தெரிவித்தார். தமிழ் மக்களின் மீள் குடியேற்றம் பற்றிய விடயத்தில் சிறீலங்கா அரசு அலட்சியத் தன்மையைக் கடைப்பிடித்தால், ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி ஆராயப்படும் எனவும் அவர் கூறினார்.

(தொடர்ச்சி 36ம் பக்கம்)

